# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### நேதாஜி சுபாஸ் - ICAR சர்வதேச ஆய்வுக்கற்கை

விவசாய ஆய்வுகளுக்கான இந்திய பேரவை (ICAR) நேதாஜி சுபாஸ் - ICAR சர்வதேச ஆய்வுக்கற்கைக்கான (NS-ICAR-IFs) விண்ணப்பங்களை, விவசாயம் மற்றும் இணைந்த விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முதுமாணி பட்டத்தினைக்கொண்ட இந்திய மற்றும் வெளிநாட்டு பிரஜைகளிடமிருந்து கோரியுள்ளது.

2. இதன் மூலமாக ICAR-AU முறைமையில் உள்வாங்கப்பட்டுள்ள இந்திய விவசாய பல்கலைக்கழகங்களில் விவசாய மற்றும் இணைந்த விஞ்ஞான துறைகளில் கலாநிதி கற்கைநெறிகளை தொடர விரும்பும் வெளிநாட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். கீழே தரப்பட்டுள்ள இணைப்பில் மேலதிக தகவல்கள், முன்னுரிமை விடயங்கள் மற்றும் விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். https://www.icar.org.in/hi/node/26210

3. “Application for NSIF: Name of Applicant and contact number” என தலைப்பிட்டு adg.hrd.applications@gmail.com என்ற இ-மெயிலுக்கு ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் 2026 செப்டெம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்படுகின்றீர்கள்.

**********

கொழும்பு
17 செப்டெம்பர் 2026